பக்கங்கள் 18+ 02

# மாலை முரசு

## அநுர அரசாங்கத்தின் பாதீடு நவம்பர் 7 இல் முன்வைப்பு!



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசின் 2026 ஆம் நிதியாண்டுக்

03▶

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 15 ஞாயிற்றுக்கிழமை 31.08.2025 | அதிர்வு 31

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# சி.ஐ.டியின் பொறிக்குள் கோட்டா!

**வாக்குமூலம் வழங்க அழைப்பு**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாக்குமூலம் அளிக்கக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

2022 இல் கொழும்பு - காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கட்டுப்படுத்தத் தவறியமை தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படை

03▶



# செம்மணியில் 209

## இன்று மட்டும் 12 மனித எலும்புக்கூடுகள் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் இன்றைய அகழ்வின் போது புதிதாக 12 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம்

04▶

# பொலிஸ் நிலையம் அருகில் ஒருவர் சுட்டுப் படுகொலை!

(க.மகாதேவன்)




புத்தளம், வென்னப்புவ பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இன்று காலை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களை இலக்கு வைத்து, காரில் பிரவேசித்த

03▶

# ரணிலின் செயலாளர் சமன் நாளை சி.ஐ.டிக்கு அழைப்பு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க வாக்குமூலம் அளிக்கக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின்

03▶



# செவ்வந்தியுடன் தொலைபேசியில் கதைத்து வரும் சந்தேகநபர் யார்?



## *மேலதிக விசாரணையை மேற்கொள்ள நீதிவானிடம் அனுமதி கேட்ட பொலிஸ்*

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த “கணேமுல்ல சஞ்சீவ” என்பவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் தேடப்படுகின்ற இஷாரா செவ்வந்தி என்ற பெண்ணுடன் தொடர்புகளைப் பேணி வரும் மற்றுமொரு

05▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# சர்வதேச நீதி கோரி கையெழுத்துப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு, கிழக்கு மனிதப் புதைகுழிகள் மற்றும் தமிழினப் படுகொலைகளுக்குச் சர்வதேச நீதி கோரி கையெழுத்துப் பெறும் நடவடிக்கை யாழ். கல்வியங்காடு சந்தை முன்பாக இன்று காலை முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் இந்தக் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது முன்னாள் மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு பொதுமக்களிடம் கையெழுத்துக்களைப் பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு, கிழக்கு மண்ணில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் நடைபெற்ற தமிழினப் படுகொலைகளுக்குச் சர்வதேச நீதியைக் கோருவதற்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் கையெழுத்துச் சேகரிக்கும் செயற்பாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.







# குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அலுவலகம் யாழ்ப்பாணத்தில் நாளை ஜனாதிபதியால் திறப்பு




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக வளா கத்தில் குடிவரவு, குடி யகல்வுத் திணைக் களத்தின் அலுவல கத்தை நாளை திங்கட் கிழமை காலை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிலையில், அலுவலகத்தின் உட்கட்டமைப்புப் பணிகள் இன்று மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

அதனை இன்று அமைச்சர் இராம லிங்கம் சந்திரசேகரர், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் மற்றும் யாழ். மாநகர சபை உறுப்பினர் சு.கபிலன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

# வெவ்வேறு இடங்களில் யானைகள் தாக்கி பெண் ஒருவர் உட்பட மூவர் பரிதாபச் சாவு!

இலங்கையில் வெவ்வேறு இடங்களில் காட்டு யானைகள் தாக்கி பெண் ஒருவர் உட்பட மூவர் பரிதாபகரமாக உயிரிழந் துள்ளனர்.

மொனராகலை மாவட்டம், செவன கலை பகுதியில் காட்டு யானை தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செவனகலை பகுதியைச் சேர்ந்த 24 நபரே உயிரிழந்துள்ளார்.

புத்தளம் மாவட்டம், நவகத்தேகம பகுதியில் காட்டு யானை தாக்கி வயோ திபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நவகத்தேகம பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

பொலனறுவை மாவட்டம், மெதிரிகிரி யை பகுதியில் காட்டு யானை தாக்கி இளம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மெதிரிகிரியை பகுதியைச் சேர்ந்த



28 வயதுடைய பெண்ணே உயிரிழந் துள்ளார்.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனந் தெரியாத நபர்களால் இந்தத் துப பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

காரில் பிரவேசித்தவர்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களை காரினால் மோதி விபத்துக்குள்ளாக்கினர்.

அதன்பின்னர், மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரைக் கூரிய ஆயுதத்தால் அவர்கள் தாக்கினர்.

இதன்போது காயமடைந்தவர்களில் ஒருவர் அங்கிருந்து தப்பியோடினார்.

மற்றைய நபர் மீது காரில் பிரவேசித்த இனந்தெரியாதவர்களால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

உயிரிழந்தவர் மேல்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு ஒன்றுக்காக வழங்கப்பட்ட உத்தரவின் பேரில், வென் னப்புவ பொலிஸில் முன்னிலையாகி கையொப்பமிடச் சென்றவர் என்று தெரியவந்துள்ளது.

கையொப்பமிட்டதன் பின்னர், அவரும் மற்றுமொருவரும் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பியபோதே, இந்தத் துப்பாக் கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

ரிவோல்வர் ரக துப்பாக்கியால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் வழக்கு தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி அறிவிக்கப்பட விருந்தது என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இங்கி லாந்துப் பயணம் மற்றும் வரு கைக்காக அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு குறித்து வாக்குமூலம் அளிக்க சமன் ஏக்க நாயக்கவை நாளை திங்கட்கிழமை முன் னிலையாகுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அழைப்பு விடுத்துள் ளது.

## அநுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குரிய வரவு -செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் பாதீட்டை முன்வைத்து ஜனாதிபதி உரையாற்றவுள்ளார். இது வரவு - செலவுத் திட்ட உரையாகும்.

அதன்பின்னர் வரவு- செலவுத் திட்டம் தொடர்பான (2 ஆம் வாசிப்பு மீதான) விவாதம் நடைபெறும். 2 ஆம் வாசிப்பு மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அது நிறைவேற்றப்பட்ட பின்னர் 3 ஆம் வாசிப்புமீதான விவாதம் நடைபெறும். இது அமைச்சுகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகளைக் குறிக்கும்.

டிசம்பர் நடுப் பகுதியில் பாதீடு மீதான இறுதி வாக்கெடுப்பு நடைபெறும்.

வரவு- செலவுத் திட்டத்தின் முன்னோடியான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் சபையில் முன்வைக்கப்படும். இது முதலாம் வாசிப்பாகக் கருதப்படும்.

இது தேசிய மக்கள் சக்தி அரசின் 2 ஆவது வரவு - செலவுத் திட்டமாகும்.

## சி.ஐ.டியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்கு மூலம் அளிக்கக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது.

எனினும், அவர் ஆஜராக வேண்டிய திகதி இதுவரை அறிவிக்கப்படவில்லை.



## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 39ஆம் நாள் அகழ்வு இன்று இடம்பெற்றது.

இன்றைய அகழ்வின் போது 12 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் இது வரை அடையாளம் காணப்பட்டுள்ள மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 209ஆக அதிகரித்துள்ளது.

மேலும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 11 மனித என்புத் தொகுதிகள் இன்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி புதைகுழியில் இருந்து இதுவரை 191 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இதுவரை 72 சான்றுப் பொருள்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டமை குறிப்பிடதக்கது.













## செவ்வந்தியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந் தேகநபர் குறித்து தகவல் கள் கிடைத்துள்ளன என்று கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகமவிடம் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்து கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி “கணேமுல்ல சஞ்சீவ” சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். அவரின் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட ஏனைய சந்தேகநபர்களைத் தவிர்த்து புதிதாக கண்டறியப்பட்டுள்ள இந்த நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு கொழும்பு பிரதான நீதிவானிடம் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள இந்தச் சந்தேகநபர் இஷாரா செவ்வந்தியுடன் தொலைபேசியில் தொடர்புகளைப் பேணி வருகின்றார் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அரசின் செயல் மகாத்மியம்

பொருத்தமற்ற காரணத்துக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை அவசரப்பட்டுக் கைது செய்து, 'சும்மா கிடந்த சங்கை ஊதி கெடுத்த ஆண்டி' போல விவகாரத் தைக் குழப்பி, நாட்டின் அரசியல் செல்நெறியை எதிர்பாராத புதிய திசையை நோக்கி நகர்த்த வழி செய்தி ருக்கிறது தேசிய மக்கள் சக்தி அரசு.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் யாரும் எதிர்பாராத விதத்தில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த பெரும் வெற்றியால் துவண்டு போய் - துண்டுபட்டு பிரிந்து போய் - கிடந்த எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் தேவையற்ற வேலையை இந்த கைது அடாவடி செய்து முடித்திருக்கின்றது.

கிடைத்த வாய்ப்பை கப்பென பற்றிக் கொண்டு காய் நகர்த்துகிறார் அரசியலில் கிழட்டு நரி என வர்ணிக் கப்படும் மதியூகி ரணில் விக்கிரம சிங்க.

தடாலடிக் கைது, நீதிமன்றத்தில் சட்ட இழுபறி, ஆஸ்பத்திரியில் அனு மதி, உடல்நிலை மோசம் என்ற பல் வேறு நாடகங்களை ஒப்பேற்றி முடித் துக் கொண்டு, இப்போது எதிர்க் கட்சிகளின் வலுவான கூட்டு அங்கம் ஒன்றை உருவாக்கும் காய் நகர்த்தலை வெற்றிகரமாக அவர் முன்னெடுக்கி றார் என்று தெரிகின்றது.

தாம் வெளியே வந்து ஒரு வாரத்துக் குள்ளேயே ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு ஒன்றை - எல்லா எதிர்க்கட்சிக ளுக்கும் பொருத்தமான ஓர் இடத்தில் - நடத்துவதற்கு அவர் ஏற்பாடு செய்திருக்கிறார். அந்தக் கூட்டத்துக்கு வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட எல்லா எதிரணித் தலைவர்களுக்கும் அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

அது மாத்திரமல்ல, ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து விலகி ஐக்கிய மக் கள் சக்தியை உருவாக்கியமை காரணமாக அத்தரப்போடு முரண் பட்ட ரணில் விக்கிரமசிங்க, அதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அவர்களை இடைநிறுத்தி வெளியிட்ட உத்தரவுகளை ரணில் விக்கிரமசிங்க இப்போது ஒரேடியாகக் கைவாங்குகின்றார்.

இதன் அர்த்தம் அவர்கள் மீண்டும் வந்து ஐக்கிய தேசியக் கட்சியில் சேரலாம் என்பது அல்ல, அந்த உறுப் பினர்கள் அனைவரும் இன்றைய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிரிகள் அல்லர் என்பதை உறுதிப்ப டுத்தும் ஒரு நட்புறவு நடவடிக்கை தான்.

ரணில் விக்கிரமசிங்கவின் தற்போ தைய நகர்வு எதிர்க்கட்சிகளை ஒரு மேடையில் ஒன்றிணைத்து, தற்போ தைய ஆளுந்தரப்புக்கு எதிராக வலுவான எதிரணி ஒன்றை நிலை நிறுத்துவதே. முன்னாள் ஜனாதிபதி யான அவரைப் பொருத்தமற்ற கார ணத்துக்காக அவசரப்பட்டு கைது செய்து, கை விலங்கிட்டு, சிறைச் சாலைக்கு அழைத்துச் சென்ற ஆளும் தரப்பின் முட்டாள்தனமான நடவ டிக்கை இவ்வாறு எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டமைக்கும் தகுதி நிலையை - செல்வாக்கை - ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெற்றுக் கொடுத்து விட்டது என்பதுதான் இதில் முக்கிய அம்சம்.

இந்த உத்தேச மாநாட்டில் நாட்டு மக்களுக்கு ரணில் விக்கிரமசிங்க முக்கிய உரையாற்றுவார். அவரது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து அவருக்கு எதிராக புதிய கட் சியை உருவாக்கி, இரண்டு பொதுத் தேர்தல்களிலும் ஜனாதிபதி தேர் தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் காலை அடியோடு வாரப் பண்ணிய ஐக்கிய மக்கள் சக்தி, இவ்வளவு விரை வில் ஐக்கிய தேசியக் கட்சியோடு மீண்டும் நல்லுறவு கொள்ளும், ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் நட்புறவோடு வீற்றிருப்பார்கள் என் பவை எல்லாம் கடந்த இரு வாரங் களுக்கு முன்னர் வரை நம்பவே முடி யாத - நடக்கவே முடியாத - எதிர் பார்க்கவே இயலாத - சாத்தியமேயற்ற - விவகாரங்களாக இருந்தன.

ஆனால் அநுர அரசின் முட்டாள்தன மான கைது நடவடிக்கை இவற்றை எல்லாம் சாத்தியமாக்கி இருக்கின்றது.



# நானாட்டான் டிலாசால் கல்லூரியின் 125 ஆவது ஆண்டில் இரத்ததானம்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெறும், சிறப்பு நிகழ்வுகளின் ஒன்றான இரத்த தான முகாம் நானாட்டான் டி லா சால் கல்லூரி பாடசாலை வளாகத்தில் பாட சாலை முதல்வர் அருட்சகோதரர் ஏ.மனோ ரஞ்சிதன் தலைமையில் நேற்று சனிக்கிழமை (30) இடம் பெற்றது.

இந்த இரத்ததான முகாமை டி லா சால் கல்லூரி சமூகம் என்பன இணைந்து பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ஆகியன இணைந்து முன்னெடுத்தன.

மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையின் இரத்த வங்கியின் உதவி யுடன் முன்னெடுக்கப்பட்ட இரத்ததான முகாமில் பலர் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்.

இதேவேளை, கடந்த வாரம் இந்த நிகழ்வின் ஒரு அங்கமாக சிறப்பு மருத்துவ முகாம் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.









# நெடுந்தீவு பிரதேச செயலராக பிரபாகரன் கடமைகளை ஏற்பு!

நெடுந்தீவு பிரதேச செயலராக என். பிரபாகரன் நேற்று முன்தினம் (29) தனது பொறுப்புக்களை ஏற்றுக் கொண் டார்.

நெடுந்தீவு பிரதேச செயலராக கடமையாற்றிய திருமதி நிவேதிதா கேதீசன் வடமாகாண பிரதிநிதிகள் அஞ்சல் மா அதி பராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள நிலையில் அவரிடமி ருந்த பொறுப்புக்களை புதிய பிரதேச செயலர் ஏற்றுக் கொண் டார்.









# இலத்திரனியல் சார் தொழில் முயற்சி திட்டம் தொடர்பான பயிற்சிப் பட்டறை

மனிதவள மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சுய தொழில் முயற்சியாளர்கள் மற்றும் எதிர்காலத்தில் சுய தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஆர்வமுடையவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஏனைய ஆர்வமுடைய முயற்சியாளர்களுக்கான இலத்திரனியல் சார் தொழில் முயற்சித் திட்டம் தொடர்பான இரு நாள் பயிற்சி பட்டறை பிரதேச செயலக மாநாடு மண்டபத்தில் பிரதேச செயலாளர் த. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

இப் பயிற்சி பட்டறையில் வளவாளராக கிளிநொச்சி மாவட்ட செயலக விதாதா மாவட்ட இணைப்பாளர் த. முரளிதரன் கலந்து கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட செயலக மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக விதாதா உத்தியோகத்தர், நீடா உத்தியோகத்தர் மற்றும் ஏற்றுமதி சார் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் இரத்ததான நிகழ்வு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில், பொத்துவில் சமாதான நீதிவான்கள் ஒன்றியம் மற்றும் பொத்துவில் இரத்ததானம் வழங்குவோர் ஒன்றியம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (29) பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றன.

“உதிரம் கொடுத்து உயிர் காப்போம்” எனும் தொனிப்பொருளில் பொத்துவில் சமாதான நீதிவான்கள் ஒன்றியத்தின் தலைவரும் பொதுச் சுகாதார பரிசோதகருமான எம்.எஸ்.அப்துல் மலிக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், இரத்ததானம் வழங்குவோர் ஒன்றியத்தின் ஸ்தாபக தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.அப்துல் வாசித் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஒன்றியத்தின் உறுப்பினர்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் கழகங்களின் உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பொத்துவில் இரத்ததானம் வழங்குவோர் ஒன்றியத்தின் செயலாளர் எம்.எஸ். எம்.அஷ்ரப் குறித்த இரத்ததான நிகழ்வை மிகவும் ஒருங்கிணைப்புச் செய்திருந்தார்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, வருடாவருடம் இரத்ததான நிகழ்வுகளை பொத்துவில் இரத்ததானம் வழங்குவோர் ஒன்றியம் ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். இந்து மாணவரின் ‘மாறும் நிழல்’ திரைப்படம் வெளியீட்டு நிகழ்வு நாளை!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களின் பங்களிப்பில் முழுமையாக தயாரித்து இயக்கப்பட்ட திரைப்படமான ‘மாறும் நிழல்’ திரைப்படம் நாளை திங்கட்கிழமை (01) வெளியிடப்படவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.



# "போதை இல்லா புதுப் பார்வை"



போதை இல்லா சமூகம்
ஒரு கனவு மட்டும் அல்ல,
அது நம்மாலே உருவாக்கும்
ஓர் உண்மை நிலைதான்

போதை என்பது
நம்மை மறக்கச் செய்கிறது,
வாழ்க்கையின் அர்த்தம்
என்னவென்பதைக் கேட்கச் செய்கிறது!

மன அழுத்தம் வந்தாலும்
மருந்து அல்ல தீர்வு,
மனதைப் பேணும் பாசம்தான்
உண்மையான இயற்கை நிவாரணம்

நட்பு, நேசம், குடும்பம்
வாழ்க்கையின் நெஞ்சம்,
அதை விலக்கிப் போதை தேடுவது
நம் விழிகளை மூடும் மரணம்!

ஒரு நபரின் வீழ்ச்சி,
ஒரு குடும்ப அழிவை ஏற்படுத்தும்,
சமூகத்தின் ஒட்டுமொத்த அமைதி
சிதைந்துபோகும் அதனாலே!
பிறந்த ஒவ்வொரு குழந்தையும்
மலர வேண்டும் நறுமணமாய்,
போதை இல்லா பூங்காவாக
சமூகத்தை மாற்றுவோம் நாமே!

மதிப்பு, மரியாதை, முயற்சி இவை
வாழ்வின் மூலதனங்கள்,
இவற்றை விட்டு போதை தேடுவது
நம் வாழ்வை நிலை குறைக்கும்!

உயிரோடு வாழும் நாள்கள்
சுத்தம் மற்றும் சுயமரியாதையுடன் இருக்கட்டும்,
போதை இல்லா ஒரு நாளே
பாரதத்தின் பெரிய வெற்றிக்குறி ஆகட்டும்!

தோளளிக்கும் நாம்,
மாற்றத்தைத் தோற்றுவிக்கும் நாம்,
போதை இல்லா சமுதாயம்
நம்மால்தான் சாத்தியம்!

**நடராசா கோபிராம்,**
சிறப்புக் கலை மாணவன்,
உளவிஇயல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.





# சிறுவரைப் பாதுகாப்போம் என்னும் தொனிப்பொருளில் பேரணி

(தலவாக்கலை பி.கேதீஸ்)

திம்புள்ள பத்தனை மவுண்ட் வேர்ணன் பிரதேச மக்களால் சிறுவர்களை பாதுகாப்போம் என்ற தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி நேற்று (30) நடைபெற்றது.

இந்தப' பேரணியானது மவுண்ட் வேர்ணன் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையம்வரை வந்து மீண்டும் மவுண்ட் வேர்ணன் தோட்டத்தை அடைந்தது.

பேரணியில் ஊர்வலமாக சென்ற சிறுவர்கள்,பெற்றோர்கள் கோஷங்களை எழுப்பியும் சுலோகங்களை ஏந்தியவாறும் கலந்துக் கொண்டனர்.












# தமிழ்த் தலைவர் அமிர்தலிங்கத்தின் 98 ஆவது பிறந்தநாள் நிகழ்வுகள்

தமிழ்த் தலைவர் அமிர்தலிங்கத்தின் 98 ஆவது பிறந்தநாள் நிகழ்வு யாழ். நூலக கேட்போர் கூடத்தில் நேற்று (30) சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

மன்னார் முன்னாள் அரச அதிபர் விஸ்வலிங்கம் தலைமை தாங்க, நினைவுப் பேருரையை பேராசிரியர் பொன். பாலசுந்தரமும் சிறப்புரையை மறவன்புலவு சச்சிதானந்தன், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி. மதிவதனி விவேகானந்தராஜா ஆகியோரும் நிகழ்த்தினர்.

நிகழ்வில் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம், கலாநிதி கா. விக்னேஸ்வரன், யாழ். மாநகர முன்னாள் முதல்வர் செல்லன் கந்தையன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கஜதீபன், முன்னாள் பிரதேச சபை தவிசாளர் திருமதி. நாகரஞ்சினி ஐங்கரன், சட்டத்தரணி கனக. மனோகரன் (கனடா) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தலைவர் அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் ஆயர் கலாநிதி ஜெபநேசன் ஐம்பது வருடங்களுக்கும் மேற்பட்ட சமுதாய சேவைக்காகப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், பேரின்பநாயகம், இராஜேந்திரன், கௌரிகாந்தன், தங்க முகுந்தன், அகிலன் ஆகியோர் அறக்கட்டளையின் சார்பில் கலந்து கொண்டனர்.

இவர்களோடு வலி கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஷா, மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.









# ஐந்து புதிய நிரந்தர வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மேலும் ஐந்து வீடுகள் நேற்று (30) பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம். பாரிஸ் தலைமையில் இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃறூப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தும் தற்கால அசாதாரண பொருளாதார சூழலில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நிரந்தர வீடுகள் இன்றிச் சிரமம் அடையும் ஐந்து குடும்பங்களுக்கே இந்த வீடுகள் இன்று கையளிக்கப்பட்டன.

சிலி நாட்டைத் தலைமையைகமாகக் கொண்டு இயங்கும் சர்வதே தொண்டு ஸ்தாபனமான SELAVIP Foundation நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் மக்கள் சேவை மன்றம் 40 நிரந்தர வீடுகளை இந்த ஆண்டு நிர்மாணித்தது. இவை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வுகள் பல கட்டங்காளாக நடைபெற்று வருகின்றன. அந்த அடிப்படையில் இந்த நிகழ்வு ஆறாவது கட்டமாக இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் திருமலை பிரதேச சபை உறுப்பிர் எம். நௌபர், அதிபர் என். எம். ஹிதாயத்துல்லாஹ், சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் கே. எம். றியாஸ், மக்கள் சேவை மன்ற சிரேஷ்ட உத்தியோகத்தர்களான பிரகலநாதன், எம். யூ. குவைசர், திருமதி பீ. கிரிஷ்ண வேணி, எம். சாஸ்த், உலமாக்கள் மற்றும் சமூகமட்ட நிறுவன உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த வீட்டுத் திட்டத்துக்கு உதவி புரிந்த மக்கள் சேவை மன்றத்துக்கும் பயனாளிகளும், கலந்து கொண்ட அதிதிகள் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொண்டனர்.








# பொத்துவில் அருகம்பையில் இடம்பெற்றது Made in Sri Lanka வர்த்தகக் கண்காட்சி

(பாறுக் ஷிஹான்)

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பை இலக்காகக் கொண்டு தொழில் மற்றும் தொழில் முனைவோர் அமைச்சின் கீழ் செயல்படும் தேசிய தொழில் அபிவிருத்தி ஆணையம் ஏற்பாடு செய்த “Made in Sri Lanka” வர்த்தக கண்காட்சி வெள்ளிக்கிழமை (29) அம்பாறை மாவட்டத்தின் அழகிய சுற்றுலா தலமான அருகம்பே கடற்கரையில் இடம்பெற்றது.

தொழில் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹதுன்நெத்தி, கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ மற்றும் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா ஆகியோரின் பங்குபற்றலுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிராந்திய அரசியல்வாதிகள், பிரதேச செயலாளர், அரச அதிகாரிகள், பல்நிறுவன ஊழியர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உள்ளூர் உற்பத்தியாளர்களின் தயாரிப்புகளை வெளிநாட்டு நுகர்வோருக்கு அறிமுகப்படுத்துவது இந்தக் கண்காட்சியின் முதன்மை நோக்கமாகும். அதற்காக கிராமிய மட்டத்தில் தயாரிக்கப்பட்ட தரமான தயாரிப்புகளுக்கான 60 இற்கும் மேற்பட்ட விற்பனை அரங்குகள் இணைக்கப்பட்டிருந்தன.









# சாய்ந்தமருதில் 5 வீதிகளின் திருத்த வேலைகள் ஆரம்பம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் வேண்டுகோளுக்கு இணங்க சாய்ந்த மருது பிரதேசத்தில் சாய்ந்தமருது ஆலிம் வீதி, நூலக வீதி, தாமரை வீதி, வீ.எச். வீதி, வைத்தியசாலை 4 ஆம் குறுக்கு வீதி ஆகிய வீதிகள் புனர்நிர்மாணம் செய்வதற்காக அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஒருங்கி ணைப்பு குழுத் தலைவரும், அரசமைப்புப் பேரவையின் உறுப்பினரும், நாடா ளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இவ்வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வுகளில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிகா, சாய்ந்தமருது பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ. ஹமீட், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் எம். இம்தியாஸ், இணைப்புச் செயலாளர் ஆசிரியர் எஸ்.எம். ஆரிப் உட்பட தொழில்நுட்ப உத்தி யோகத்தர்கள் மற்றும் அதிகாரிகள், தேசிய மக்கள் சக்தியின் செயற்பட்டாளர் கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# அரியாலை "கில்லிகள்" மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு ஏற்பாடு

(எஸ்.நிதர்ஷன்)

அரியாலை "கில்லிகள்" மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 6ஆம், 7 ஆம் திகதிகளில் இடம்பெறவுள் ளன என்று சுற்றுப் போடியின் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

இது குறித்துத் யாழ். ஊடக அமை யத்தில் ஊடக சந்திப்பொன்றை முன் னெடுத்த ஏற்பாட்டுக் குழு மேலும் கூறு கையில்,

கிராமத்து வீரர்களின் திறமைகளை வெளிக்கொணரவும் அதற்கான அங்கீகா ரத்தை கொடுக்கும் வகை யிலும் வருடா வருடம் நடத்தப்படும் நோக்குடன், கடந்த வருடம் இந்தச் சுற்றுப் போட்டி ஆரம்பிக் கப்பட்டது.




9 வீரர்கர்கள் களமிறங்கும் 6 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட போடியான குறித்த தொடரில் ஏலத்தின் மூலம் வீரர்கள் உள்வாங்கப்பட்டு நடத்தபடும் போட்டியில் இம்முறை கிராமத்து வீரர்களுக்கு அங்கீகாரம் - அரியாலையில் ஆரம்பமாகிறது.

அரியாலை,கொழும்புத் துறை, ஈச்சமோட்டை, மணியந்தோட்டம், பாசை யூர், சுண்டுக்குளி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய 10 அணிகள் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுகின்றன.

இந்தப் போட்டி எதிர்வரும் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் அரியாலையில் இடம்பெறவுள்ளது.

கிரிக்கெட் விதிமுறைகளுக்கு அமைய நடத்தப்படவுள்ள இந்தப் போட்டியில் முதல் மூன்றிடங்களை பெறும் அணிக ளுக்கு முறையே 150 ஆயிரம், 80 ஆயிரம், 30 ஆயிரம் பணப் பரிசில்களு டன் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப் படவுள்ளன.- என்று தெரிவிக்கப்பட்டது.

# மக்கள் நலன் காக்க ஒரே தீர்வு அ.தி.மு.க ஒன்றுபட வேண்டும்

## சசிகலா கூறுகின்றார்



தமிழக மக்களின் நலன் காக்க ஒன்றுபட்ட அ.தி.மு.க. தான் ஒரே தீர்வு என்று சசிகலா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

"நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சியினரும் பார்த்து பொறாமைப்படும் அளவுக்கு ஒளிர்ந்த நம் இயக்கம், இன்றைக்கு ஏளனமாக பேசும் அளவுக்கு இருப்பது மிகவும் வேதனை அளிக்கிறது.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகிய இரு பெரும் தலைவர்கள் இல்லாத நிலையில் இன்று கட்சி பெரும் சோதனைக்கு ஆளாகி உள்ளது. கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்கள், விலகி இருப்பவர்கள் என அனைவரும் கரம் கோர்த்து ஒன்றிணைந்து எதிரியை வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

நம் மனமாச்சர்யங்களை மறந்து, கருத்து வேறுபாடுகளை கடந்து கட்சி, கட்சியின் நலன், கட்சியின் எதிர்காலம், கட்சியின் வெற்றி முக்கியம், அந்த வெற்றி தி.மு.க. என்ற தீய சக்தியை வரும் தேர்தலில் வீழ்த்துவதாக அமைவது மிக முக்கியம் என்பதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டிய முக்கிய தருணம் இது.

எந்த தி.மு.கவை ஆட்சி அதிகாரத்திலிருந்தும், அரசியல் களத்திலிருந்தும் அப்புறப்படுத்த வேண்டும் என்று எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் பாடுபட்டார்களோ, அந்த தி.மு.க. மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கக்கூடிய சூழலை நாம் உருவாக்கி விடக்கூடாது.

எனக்கு நம் கட்சியினர் யார் மீதும் எந்தவித கோபமோ, வருத்தமோ இல்லை. உங்களில் ஒருத்தியாக, உங்களின் சகோதரியாக இருந்து அனைவருடன் ஒன்றிணைந்து கழகப் பணியாற்றவே நான் விரும்புகிறேன். கட்சி தொடர்ந்து தோல்விகளையே சந்தித்து வருகிறது. இதை இப்படியே இனியும் வேடிக்கை பார்ப்பது நம் இருபெரும் தலைவர்களுக்கு செய்கின்ற மிகப்பெரிய துரோகமாகிவிடும்.

மேலும், தமிழக மக்களுக்கு செய்கின்ற மிகப்பெரிய அநீதியாகிவிடும். எனவே, தமிழக மக்கள் நலன் காக்க ஒன்றுபட்ட, வலிமை மிக்க அ.தி.மு.க. தான் ஒரே தீர்வு. அதைத்தான் அனைவரும் விரும்புகின்றனர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# சிறப்பாக செயல்படும் முதல்வர்கள் பட்டியலில் ஸ்டாலினுக்கு இடமில்லை என்கிறார் அன்புமணி




சிறப்பாக செயல்படும் 10 முதல்வர்கள் பட்டியலில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இடம் கிடைக்கவில்லை. தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு அனைத்துத் துறைகளிலும் தோல்வி அடைந்து விட்டது அனைத்துத் தரப்பினரின் வெறுப்பையும் பெற்றுள்ளது என்று பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இந்தியா டுடே வார இதழ் சார்பில் இந்தியாவில் 10 மக்களவைத் தொகுதிகளுக்கும் கூடுதலாக உள்ள மாநிலங்களை ஆளும் முதலமைச்சர்களில் சிறப்பாக செயல்படுபவர் யார்? என்பதை அறிவதற்காக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் அஸ்ஸாம் முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மா முதலிடத்தையும், சத்தீஸ்கர் முதலமைச்சர் விஷ்ணு தியோ சாய் இரண்டாவது இடத்தையும், உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளனர். மொத்தம் 10 முதலமைச்சர்களைக் கொண்ட பட்டியலில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இடம் கிடைக்கவில்லை.

ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மக்களிடம் அம்மாநில முதலமைச்சரின் செயல்பாடு எவ்வாறு உள்ளது? என்பது குறித்து கருத்துக் கேட்டு அவர்கள் அளிக்கும் ஆதரவின் அடிப்படையில் தான் இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தயாரிக்கப்பட்ட இதே போன்ற பட்டியலில் 36 வீத ஆதரவுடன் எட்டாவது இடத்திலும், 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 57வீத ஆதரவுடன் இரண்டாம் இடத்திலும் இருந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த முறை முதல் 10 இடங்களில் வர முடியாத அளவுக்கு செல்வாக்கை இழந்திருக்கிறார்.

சிறந்த முதலமைச்சர்கள் பட்டியலில் பத்தாம் இடத்தைப் பிடித்துள்ள பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த்சிங் மான் 29.9 வீத மக்கள் ஆதரவைப் பிடித்திருக்கிறார். அப்படியானால், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அதை விட குறைவான ஆதரவு தான் இருப்பதாகப் பொருள் ஆகும். 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 57 வீத மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த மு.க.ஸ்டாலின் இப்போது அதில் பாதியளவுக்கும் குறைவான ஆதரவை மட்டுமே பெற்றிருக்கிறார் என்பதிலிருந்தே, அவரது செல்வாக்கு எவ்வளவு வேகமாக சரிந்து வருகிறது என்பதை அறியலாம்.

தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு அனைத்துத் துறைகளிலும் தோல்வி அடைந்து விட்டது அனைத்துத் தரப்பினரின் வெறுப்பையும் பெற்றுள்ளது என்று நீண்டகாலமாகவே கூறி வருகிறேன். இப்போது அது உண்மயாகி விட்டது. 2026 ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலுக்கு முன்பாக மு.க.ஸ்டாலினின் செல்வாக்கு மேலும் குறையும். ஆட்சிப் பொறுப்பில் இருந்து அவர் தூக்கியெறியப்படுவார் என்பதையே இந்தக் கருத்துக் கணிப்பு முடிவுகள் காட்டுகின்றன, தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் உறுதி என்பதையே இவை வெளிப்படுத்துகின்றன. விடியல் தரா ஆட்சி வீழட்டும்." என்று தெரிவித்துள்ளார்.



# வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி ஜம்மு காஷ்மீரில் 11 பேர் பலி

ஜம்மு காஷ்மீரில் கடந்த 2 வாரங்களாக மேகவெடிப்பால் பெரு வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்படுவது தொடர்கிறது. இந்தப் பேரிடர் காரணமாக ஜம்முவில் இதுவரை 130 பேர் உயிரிழந்தனர். 140 பேர் காயம் அடைந்துள்ளனர். 32 பக்தர்களை காணவில்லை.

ரியாசி மாவட்டத்தில் உள்ள மாதா வைஷ்ணவ தேவி கோயிலுக்கு செல்லும் வழியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 34 பக்தர்கள் உயிரிழந்தனர். இக்கோயிலுக்கான யாத்திரை நேற்று 5 ஆவது நாளாக நிறுத்தி வைக்கப்பட்டது.

ஜம்மு காஷ்மீரில் 24 மணி நேரமும் மழை, வெள்ள நிலவரத்தை கண்காணிக்கவும் ஆபத்தான இடங்களில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு மாற்றவும் அதிகாரிகளுக்கு முதல்வர் உமர் அப்துல்லா உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில், ரியாசி மாவட்டத்தின் தொலைதூர பத்தேர் கிராமத்தில் நேற்று அதிகாலை கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் ஒரு வீடு சிக்கியது. இதில் அந்த வீட்டில் வசித்த கணவன், மனைவி, 5 குழந்தைகள் என 7 பேரும் உயிரிழந்தனர்.

# இந்தியாவுடன் கண்ணியமான முறையில் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் தயார்



இந்தியாவுடன் கண்ணியமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளதாகப் பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலையடுத்து பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா வான்வழித் தாக்குதல் நடத்தியது.

ஒப்ரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்தியா எடுத்த இந்த நடவடிக்கையை அடுத்து பாகிஸ்தானும் இந்தியாவின் எல்லையோர கிராமங்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியது.

இதனையடுத்து, மூன்று நாள்களுக்கும் மேலாக இரண்டு நாடுகளுக்கிடையில் நீடித்த மோதல், பாகிஸ்தான் கேட்டுக்கொண்டதையடுத்து நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டது. போர் நிறுத்தம் ஏற்பட்டாலும் இந்தியா, பாகிஸ்தானுக்கு எதிரான அனைத்து உறவுகளையும் துண்டித்துள்ளது.

குறிப்பாக, சிந்து நதி நீர் ஒப்பந்தத்தையும் ரத்து செய்வதாக அறிவித்தது.

இதனால், வறட்சிக்குள் தள்ளப்பட்டுள்ள பாகிஸ்தான், இந்தியாவிடம் பேச்சுவார்த்தைக்கு வரத் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் இஷாக் தார் அறிவித்துள்ளார்.









# உக்ரைன் மீது ரஷ்யா மிகப்பெரிய தாக்குதல்

உக்ரைனின் 14 பிராந்தியங்கள் மீது ரஷ்யா ஒரே இரவில் மிகப்பெரிய தாக்குதலை நடத்தியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் தலைநகரில் அமைந்துள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களும் உள்ளடங்குகின்றன.

இந்த தாக்குதல்களின்போது தெற்கு சபோரிஜியா பகுதியில் ஒரு பெண் கொல்லப்பட்டுள்ளார்.

சிறுவர்கள் உட்பட 30 பேர் காயமடைந்தனர் என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல்களின்போது ரஷ்யா கிட்டத்தட்ட 540 ஆளில்லா விமானங்களையும் 45 ஏவுகணைகளை ஏவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலைத் தொடர்ந்து, ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,தாக்குதலின் அனைத்து இலக்குகளும் அடையப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளது.

எனினும் தாக்குதல்களின் விளைவு குறித்து உக்ரைனின் உத்தியோக பூர்வ கருத்து இன்னும் வெளியாக வில்லை.









கனடா முரசு
பக்கங்கள் 02
ஞாயிற்றுக்கிழமை 31/08/2025

## 50 ஆண்டுகளின் பின்னர் தனது வீடு திரும்பிய நபர்

கனடாவில் நபர் ஒருவர் சுமார் 50 ஆண்டுகளின் பின்னர் தனது குடும்ப உறுப்பினர்களை சந்தித்த நெகிழ்ச்சியான சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

தனது பூர்வீக

02



# கனடாவின் முதல் விண்கலத்தை ஏவுகின்ற பணியில் கால தாமதம்

கனடாவின் முதல் வணிக விண்கலம் ஏவும் நடவடிக்க ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நோர்ட்ஸ்பேஸ் நிறுவனம் உருவாக்கிய, 'டைகா' (Taiga) எனப்படும் ஒரே என்ஜின் கொண்ட விண்கலம் சோதனை ஏவுதலே இதுவாகும்.

சுமார் ஆறு மீட்டர் உயரமுள்ள இந்த விண்கலம் 3D பிரிண்டட் மெட்டல் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. முதலில் கடந்த திங்கள் கிழமைக்கு திட்டமிடப்பட்ட ஏவுதல், வானிலை சிக்கலால் ஒத்திவைக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை காலை மீண்டும் தொழில்நுட்ப சிக்கல் காரணமாக ஏவுதல் நிறுத்தப்பட்டது.

இது எளிதில் சரி செய்யக்கூடிய பிரச்சினை. எங்கள் அடுத்த முயற்சி வெற்றியாகும் என்பதில் நம்பிக்கை உள்ளது என நோர்ட்ஸ்பேஸ் தலைமை செயல் அதிகாரி ராகுல் கோயல் கூறியுள்ளார்.








# க்யூபெக்கில் 46 மில்லியன் டொலர் பணப் பரிசு வென்ற அதிர்ஷ்டசாலி

கனடாவின் க்யூபெக் மாகாணத்தில் லொத்தர் சீட்டிலுப்பில் ஒருவர் 46 மில்லியன் டொலர் பணப்பரிசு வென்றுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற லாட்டோ 6/49 கோல்டு பால் ஜாக்பாட் லொத்தர் சீட்டிலுப்பில் 46 மில்லியன் கனேடிய டொலர் பரிசுத்தொகை வென்றெடுக்கப்பட்டுள்ளது.

இந்த லொத்தர் சீட்டு க்யூபெக் மாகாணத்தில் விற்கப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஆகஸ்ட் 30 ஆம் திகதியிலான கோல்டு பால் லாட்டரி ஜாக்பாட் தொகை 10 மில்லியன் டொலராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

லோட்டோ-க்யூபெக் நிறுவனம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது. அதே நேரத்தில், வழக்கம்போல் கிளாசிக் ஜாக்பாட் தொகை 5 மில்லியன் டொலராக தொடரும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சாத்தம்-கென்ட் பகுதியில் கத்தி குத்து சம்பவம் பதிவு

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தின் சாத்தம்-கென்ட் பகுதியில் கத்தி குத்து சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

தன்னை பணியிலிருந்து நீக்கிய இரு மேலாளர்களை கத்தியாலும் கொடுவாளாலும் தாக்கினார் என பணியாளர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ரிட்ஜ்டவுன் பகுதியைச் சேர்ந்த 36 வயது ஆண் ஒருவரே இந்த குற்றச்சாட்டிடன் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ப்ளென்ஹீம் நகரின் ஜேம்ஸ் வீதியிலுள்ள ஒரு வணிக நிலையத்தில், பணியிலிருந்து நீக்கப்பட்டதை அறிந்த அந்த ஊழியர் ஆவேசமடைந்து வெளியேற மறுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சண்டையில், அவர் இரு மேலாளர்களையும் கத்தியால் குத்தினார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் இரு மேலாளர்களுக்கும் பல இடங்களில் காயம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருவரும் உயிருக்கு ஆபத்தில்லாத காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும்




குற்றவாளியும் காயங்களுக்கு சிகிச்சை பெற்று, பின்னர் பொலிஸ் தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபருக்கு எதிராக பொலிஸார் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளதுடன் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## 50 ஆண்டுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறவுகளையும் குடும்பத்தினரையும்



சந்திப்பதற்காக ஜோனத்தன் ஹூக்கர் என்ற நபர் மனிடோபாவுக்கு திரும்பியுள்ளார் தனது குடும்பத்துடன் மீள இணைந்து கொள்வதற்காக இவ்வாறு மனிடோபா திரும்பியதாகத் தெரிவித்துள்ளார்.

தாம் தத்தெடுக்கப்பட்டவன் என்பதைக் குழந்தை பருவத்திலிருந்தே அறிந்து கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் உண்மையை தெளிவாக புரிந்துகொள்ள சில ஆண்டுகள் கடந்து விட்டன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

1975 இல் ஆண்டில் ஹூக்கர் வெறும் 18 மாத இருந்த நிலையில் பூர்வீக குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டு, பின்னர் குடும்பமொன்றால் தத்தெடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

அந்தக் குடும்பத்தினர் தம்மை நியூசிலாந்துக்கு அழைத்துச் சென்றனர் என குறிப்பிட்டுள்ளார். 50 ஆண்டுகளின் பின்னர் பெற்ற தாயான பேட்சி ஜார்ஜை முதல்முறையாக சந்தித்ததாக குறிப்பிடுகின்றார்.

தாயாரை மீண்டும் பார்க்க முடியாது என நினைத்ததாகவும் மிக இளவயதில் சிசுவாக இருந்த போதே தாயாரிடமிருந்து தாம் பிரிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

மனிடோபா பழங்குடியினத் தலைவர்கள் இதை ‘ஒரு புதிய தொடக்கம்’ என வர்ணித்து, இத்தகைய மீளிணைப்பு இன்னும் பல குடும்பங்களுக்கு நம்பிக்கை அளிக்கும் என குறிப்பிட்டுள்ளனர்.

கனடாவில் பழங்குடியின குழந்தைகள் பலர் இவ்வாறு குடும்பங்களிடமிருந்து பிரிக்கப்பட்டு வேறு நபர்களுக்கு தத்து கொடுக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.